உ
சிவமயம்

# இந்துசாதனம்

சைவ பரிபாலன சபை வெளியீடு. பிரதி விலை: சதம் 20

ஆரம்பம்: விரோதி ஸு (1889) ஆவணிமீ 28-ம் உ அச்சகம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 450. காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்-அஎ] யாழ்ப்பாணம்:- இராக்ஷத ஸு ஐப்பசிமீ உக-உ வெள்ளிக்கிழமை (7-11-1975) [இல: ௩க

# அருணகிரிநாதர் 600-ஆவது ஆண்டு விழா

## தமிழகத் தருமை திருவாவடுதுறை ஆதீனவித்வான்கள்சிறப்புரை நிகழும்

### நான்கு நாள் நிகழ்ச்சிகள்

எதிர்வரும் 13, 14, 15, 16-ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மண்டபத்திலும், யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையாரின் நாவலர் ஆச்சிரம மண்டபத்திலும் நடைபெறவிருக்கும் அருணகிரிநாதர் அறுநூறாவது ஆண்டு விழாவிற் கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்துவதற்கு தருமை ஆதீன வித்துவானும் தமிழ் நாடு அறநிலையப் பாதுகாப்பு வெளியிடும் "திருக்கோயில்" மாத சஞ்சிகையின் ஆசிரியருமான புலவர் திரு. ந. ரா. முருகவேள் அவர்களும், திருவாவடுதுறை ஆதீன மகாவித்துவான் புலவர் திலகம் புலவர் கீரன் அவர்களும் அவர் துணைவியார் திருமதி. செல்லப்பாப்பா கீரன் அவர்களும் இலங்கை வருகின்றார்கள், மூன்று தினங்களுக்கு நடைபெற இருக்கும் இப் பெரு விழாவில் இருபதுக்கு மேற்பட்ட ஈழத்து உரைஞர்களும் கலந்து கொள்ள இருக்கின்றார்கள்.

13-ம் திகதி பிற்பகல் நாலு மணிக்கு நல்லூர் கந்தசாமி கோவிலில் இருந்து ஆரம்பமாகும் அருணகிரிநாதர் திரு உருவப்பட ஊர்வலத்துடன் மாநாடு ஆரம்பமாகின்றது. இவ்வூர்வலம் பருத்தித்துறை வீதி, ஸ்ரான்லி வீதி கே. கே. எஸ். வீதிவழி வந்து விழா மண்டபத்தை அடையும். இரண்டாம்நாள்நிகழ்ச்சிகள் 14-ம் திகதி காலை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் ஆரம்பமாகும். அன்று காலை அருணகிரிநாதர் குருபூசை, புராண படனம், மாகேசுர பூசை ஆதியன இடம்பெறும். இதனைத் தொடர்ந்து கவியரங்கு, கருத்தரங்கு. உரையரங்கு, வழக்காடுமன்றம் ஆகிய நிகழ்ச்சிகள் மூன்று தினங்களும் நடைபெறும். மூன்று நாள் இரவும் கலை நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

மாநாட்டின் இரண்டாம் நாளாகிய 14-ம் திகதி வெள்ளி காலை இலங்கையில் உள்ள சகல சைவ ஆலயங்களிலும் அருணகிரிநாதர் பெயரில் விசேட ஆராதனைகளும் திருப்புகழ் ஓதலும் இடம்பெறவேண்டும் என்று மேற்படி மாநாட்டு அமைப்பாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்கள். ஈழத்தின் வேறு சில பகுதிகளிலும் தொடர்ந்து அருணகிரிநாதர் விழாவினை எடுப்பதற்கானமுயற்சிகளிலும் இவ்விழாக் குழுவினர் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிகின்றது.

## சமய தீட்சை

திருவருளை முன்னிட்டு நிகழும் ஐப்பசி மாதக் கடைசி வெள்ளிக்கிழமை (14-11-75), யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை ஆதரவில் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் கரணவாய் ஆதீனம் ஸ்ரீமத் கை. திருஞானசம்பந்தக் குருக்கள் அவர்கள் சிறுவர்கட்கும் முதியோர்கட்கும் சமய தீட்சை காலை 8 மணி தொடக்கம் புரிந்து வைப்பார்.

தீட்சை பெற விரும்புவோர் தங்கள் பெயர்களை 13-11-75க்கு முன் தெரிவிப்பார்களாக.

யாவரும் ஆசாரசீலராகக் குறித்த நேரத்திற்கு வருதல் விரும்பத்தக்கது.

ஒவ்வொருவரும் தட்சணையாக ரூபா 4/- வழங்குவார்களாக.

சைவ பரிபாலன சபை, வை. இரகுநாதமுதலியார்
யாழ்ப்பாணம், 5-11-75. கௌரவ செயலாளர்.

## வித்துவான் பிரம்மஸ்ரீ சி. கணேசையர் நினைவு

செந்தமிழ் நாட்டின் செம்மை வித்துவ பரம்பரையின் சிறப்பே இதற்கோர் எடுத்துக் காட்டாக இலங்கியவர் அந்தணத் திருவாளர் திலகம் வித்துவான் சி. கணேசையர் அவர்கள்.

நன் மாணாக்கர் பலருக்கு இலக்கணம் இலக்கியம் கற்பித்த (பல்கலைக் கழகப் பட்டதாரியல்லாத) பேராசிரியர் ஐயர் அவர்கள்.

ஐயர் அவர்களின் அளப்பருஞ் சேவை அவர்கள் பதிப்பித்த தொல்காப்பியம் எழுத்ததிகாரம் நச்சினார்க்கினியம் சொல்லதிகாரம் சேனாவரையம் பொருளதிகாரம் முதலாம் பாகம் நச்சினார்க்கினியம் இரண்டாம் பாகம் பேராசிரியம் ஆகிய வெளியீடுகளாகும்.

ஒழுக்கத்தின்மிக்கவராய் உயர்ந்த நுண்ணறிவுபடைத்தவராய் விளங்கிய ஐயர் அவர்கள் தமிழகத்தின் தலைமைசால் அறிஞர். அவர்களைப்பற்றி தங்கத் தாத்தா நவாலியூர் க. சோமசுந்தரப்புலவர் விதந்துரைத்தவையை இங்கே காண்க.

"ஆரியமுஞ் செந்தமிழு
மாயிரண்டு மொழியயின்றே
யறிவின் முத்துச்
சீரியநான மறையொழுக்கந்
திறம்பாத தவவிரத
சீல முன்னோன்
காரணகா ரியதொடர்ச்சி
யில்லாத கரிமுகவன்
கமல பாத
நேரியநெஞ் சினிநிறுத்தி
யெந்நாளும் துதிககுமொரு
நியமம பூண்டோன்

கணேசையர் கலைத் தொண்டுக்குத் தமிழகம் என்றும் கடமை பூண்டுள்ளது.

வேலணை-சிற்பனை முருகன் ஆலய

## கந்தசஷ்டி விழா

வேலணை சிற்பனை ஸ்ரீ முருகமூர்த்தி கோவிலில் கந்தசஷ்டித் திருவிழாக் கால வழிபாட்டில கூட்டுப பிரார்த்தனைக்குச் சிறப்பிடம வழங்கப்பெற்றுள்ளது. சென்ற 5-11-75 அன்று மாலை நல்லூர் பஜனைச் சபையினரும் நாயன்மார்கட்டு சைவ சமய அபிவிருத்திக் கழகத்தினரும் பஜனை நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர். ஏராளமான சிவனடியார்கள் பரவச நிலையில் பாடும் பணியில் ஈடுபட்டனர். இரவு மயிலவாகனத்தில் பெருமான் திரு வீதி உலா வருங் காட்சி நிகழ்ந்தது,

## இராமநாத ஏந்தலின் நினைவு என்றும் உளது

### ஐப்பசித் திங்கள் இருபத்தைந்தாவது நாள் [11-11-75]

ஈழத் திருநாட்டின் வரலாற்றைப் பன்மடங்கு எழில் பெறச் செய்த மகான்களில் நாவலர் அவர்களுக்கு அடுத்தாற்போல வள்ளல் இராமநாதன் அவர்களே,

திரு. ச. பொன்னம்பலபிள்ளை இயற்றிய "ஸ்ரீ இராமநாத மான்மியம்" என்ற நூலில் "உலகியல் விளக்கம்" "திருவாசக விரிவுரை" முதலியனவற்றின் ஆசிரியர் பிரம்மஸ்ரீ சு. நவநீதகிருஷ்ண பாரதியார் அவாகள் சொல்லியன

திருமகட்குப் புயங்கொடுதுக் கலைமகட்கு நாக்கொடுத்துத்
தெய்வத் தர்மத்(து)
ஒருமகட்குக் கைகொடுத்து மெய்கொடுத்த சிவஞான
வுண்மைச் செல்வன்
தருமகட்குத் தலைகொடுத்துச் சச்சிதானந்தத்தின்
சாரந் துய்ப்போன்
பெருமகளாம் இலங்கைக்குப் புகழ்கொடுத்து
மகிழ்படைத்த பெருமை யோனே. (1)

(வளர்ச்சி 2ம் பக்கம்)

## பரமன் சேய் மீது பத்து வெண்பாக்கள் [1]

"சொக்கன்"

முருகப் பெருமானின் திருவடிகளைச் சரணடைந்து என்றும் மாறா இன்பம் பெற்ற அடியான் ஒருவன், அவ்வின்பத்தை அடைய விழைந்த மற்றொருவனைத் திருப்பரங்குன்றம் முதலாம் ஆறுபடை வீடுகளுக்கும் வழி காட்டி விடுவதாக அமைந்த பிரபந்தம் திருமுருகாற்றுப்படையாகும். பொய்யில் புலவர் வழி வந்த நக்கீரர் இத் தெய்வப் பெருநூலை இயற்றியருளினார். இதன் தொடர்ச்சியாக முருகப்பெருமானை வினித்து அவன் அருளை வேட்கும் வகையிலே பத்து வெண்பாக்கள் வந்துள்ளன. பரமன் சேயின் பண்பு நலங்களை யெல்லாம் விரித்துரைக்கும் இப் பாடல்களும் நக்கீரராலேயே இயற்றியருளப்பட்டவை என்பது சிலர் கூற்று. இவை பிற் சேர்க்கையாக இருக்கலாம் என்பதும் ஒரு சாரார் முடிவு. அஃதெவ்வாறாயினும் இன்றுவரை முருகன் அடியார்கள் இத் தீந் தமிழ்த் தெய்வப் பாக்களை மனமு கனிந்து ஓதி வருவதிலிருந்து இவற்றின் பெருமை நன்கு புலனாகின்றது.

புவியியல் ஆராய்வில பல பிரிவுகள் உள்ளன. பூமுகத்தின் மேற்றரை அமைந்த வகையினை ஆராய்வதும் அப்பிரிவுகளுள் ஒன்றாகும், ஆரம்பத்திலே சிறு துகள்களாயிருந்த கற்றுணிக்கைகள்காலப் போக்கில் நிகழ்ந்த இயற்கைச் செயல்களால் ஒன்றிரண்டு பாறைகளாகவும், குன்றுகளாகவும் பெருமலைகளாகவும் அமைந்தன என்பது தரைஇயலார் கூற்று. இவ் வாறமைந்த பாறைகளை மனிதன் தனது ஆற்றலாலே

(வளர்ச்சி 2 ஆம் பக்கம்)

சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்க தண்புனல்
வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர்தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

இராக்ஷத வூல ஐப்பசிமீ உக-உ வெள்ளி

## வேறென்னவேண்டும்?

தொன்மை மறவா திருக்க வேண்டும். தூயதமிழ் இனிமை சுவைக்க வேண்டும். அன்னை தமிழுக்கும் அரிய சைவத்துக்கும் அடியார்களாயுள்ளவர்களை என்றும் நினைவுகூர வேண்டும். இவ்வண்ணம் இயங்கினல் இறை நெறி நிற்கும் இயல்பு முறையாக நிலவும். சைவசமயிகளாவோம் — வேறென்ன வேண்டும்!

"கருமமே கட்டளைக் கல்" — என்பது பொய்யா மொழிக் கருத்து, எதற்கு பெருமைக்கு! அத்தகைய பெருமையுடன் உத்தமர்களாய் வாழ்ந்து மொழிக்கும் மதத்துக்கும் மெத்தகு பணிபுரிந்த வள்ளல் இராமநாதனையும் வித்துவான் கணேசையரையும் எண்ணி எண்ணி அவர்கள் ஆற்றிய அரும் பணியை மீண்டும் மீண்டும் போற்றுகின்றோம். கலை பயில் வண்மையுடன் கற்றவற்றை மற்றையோருக்குற்றவாறு நூல்கள் வாயிலாக எடுத்துரைத்த இப் பெரியார்கள் தமிழக வரலாற்றுக்குரியவர்கள்.

இராமநாத வள்ளல் தமிழ் அறிஞர்களை எங்ஙனம் போற்றி ஆதரித்தனர் என்பது அன்னார் ஆறுமுக நாவலர் பெருமானை விதந்து (Champion Reformer of Hindus) 'சைவர்களின் சீர்திருத்தவாத முதன்மை சால் வாகையன்' எனக் கூறியதிலிருந்து புலப்படும்.

அவ்வாறே இராமநாதவள்ளலை வித்துவான் கணேசையர் செவ்விதாய்ப் புகழ்ந்து பாடினர். (இவ்விதழிற் பிறிதோரிடத்திற் காண்க)

'கற்றாரைக் கற்றாரே காமுறுவர்', இப் பண்பைப் பண்பாளரே எடுத்துரைப்பர், வித்துவ பரம்பரையின் விளக்கமே எம் மொழிச் சிறப்பும் எம் மதச் சீரும்"

ஆகவே தமிழகச் சால்பு இவ்வகம் வளர்த்த ஏந்தல்களை எண்ணுவதோடு அவர்கள் நுண்ணறிவின் விளைவாகிய பொன்னனைய நூல்களைப் போற்றுதலுமாகும்.

இராமநாத இலட்சியத்தை வித்துவான் கணேசையர் விதந்து பாராட்டியிருக்கின்றனர். வித்துவான் அவர்களின் பெருந் தொண்டினைத் தங்கத் தாத்தா புகழ்ந்து போற்றியிருக்கின்றனர்

எனவே தமிழ் நூல் தந்த சைவ நெறி நின்ற தக்காரைத் தாயகம் சார்பாக என்றும் நினைவுகூருவோமாக.

---

## இராமநாத ஏந்தலின் நினைவு

(1- ஆம் பக்கத்து வளர்ச்சி)

காடெல்லாம் வயலாக்கி நாடெல்லாம் பசிநீக்கிக் கனிந்து நெஞ்சின்
ஊடெல்லாங் கலைபடிந்த அருட்சோதி விளக்கேற்றி
ஒன்றைப் போற்றி
ஏடெல்லாம் பாட்டாக்கிப் பாட்டெல்லாந் தான்பொருளா
வீருந் தொளிர்ந்து
கூடெல்லாம் எடுத்தபயன் உயிர்கொள்ளத் தவம்புரியும்
கோமான் ருனே. (2)

[சுன்னுகம் பிராசீன பாடசாலைத் தமிழ் தலைமை ஆசிரியராயிருந்தவித்துவான் புன்னுலைக்கட்டுவன் பிரம்ம ஸ்ரீ சி. கணேசையர் அவர்கள் கூறியன.]

தென்னிலங்கைத் தேசாதி பதியாகி வருவோருஞ் செப்புந்தன் சொல்
பொன்னியல்பிற போற்றியிடச் சட்டநிரு பணசபையிற
போற்றுஞ் சிங்க
மென்னவுறீஇ யஞ்சாமல் விழைவுபெற வண்மையொடு
மியம்பும் வாக்காற்
றுன்னியவச் சபையினிடைத் தானெவற்கு முதன்மையுறத்
தோற்றி நின்றோன் (1)

## "பன்னிரு கையும் பாற்பட இயற்றுதல்"

(முன் வளர்ச்சி — 2)

பொன்னுரம் பொலிந்த கவின்கொள் மார்பிலே சிவந்த மூன்று வரிகளும் நிறைந்து பெருகு தோள்களில்

விண்செலன் மரபி னையர்க் கேந்திய
தொருகை யுக்கஞ் சேர்த்திய தொருகை,

என்றும் வானில் இயங்கும் முறைமையுடைய தெய்வ இருடிகளுக்குப் பாதுகாப்பாக எடுத்தது ஒரு கை

இவ்வாறேந்திய கைக்கு இணையாக மருங்கிலே சேர்ந்தது ஒருகை. எனவே "மாயிருண் ஞால மறுவின்றி விளங்கப் பல்கதிர் விரிந்த முகத்துக்குர் உகந்த தொழிலை இக் கரங்கள் புரிந்தனவென்க.

நலம்பெறு கலிங்கத்துக் குறங்கின் மிசை யசைஇய தொருகை
யங்குசங் கடாவ வொருகை.

ஒருகை தோட்டியைச் செலுத்த அடுத்த கை ஆடையுடுத்திய தொடை மீதமர்ந்தது.

இவை "காதலினுவந்து வரங் கொடுத்த முகத்துக்' கியைந்தமை காண்க.

... ... ... ... இருகை
ஐயிரு வட்டமொ டெஃகுவலந் திரிப்ப

ஐந்தாகிய பெருத்த பரிசையும் வேலையும் இருகரங்கள் வலமாகச் சுழற்றின.

இவை "வேள்வியோர்க்கும் முகத்திற்கு பொருத்தமானவை புலப்படும்,

...... .. ... ஒரு கை
மார்பொடு விளங்க வொருகை
தாரோடு பொலிய

முனிபுங்கவர்களுக்கு மெய்ப்பொருள் தத்துவ விளக்கம் உணர்த்தப்பெறுங் காலந் திருமார்புடன் ஒரு கையும் அம் மார்பிற் பொலியும் மாலையுடன் ஒரு கையும் அணி பெறச் சேர்ந்தன.

"எஞ்சிய பொருள்களை விளக்கும்' முகத்துக்குகந்தனவாயின இவ்விரு கரங்களும்.

...... ...... ...... ஒரு கை
கீழ்வீழ் தொடியொடு மீமிசைக் கொட்ப வொருகை
பாடின் படு மணி யிரட்ட

தொடியொடு மேலாகச் சுழன்று ஒரு கை களவேள்விக்கு முத்திரை கொடுக்கவும் மற்றைக் கை இன்னிசை எழுப்பும நன் மணியை ஆர்த்திடச் செய்யவும், 'களம் வேட்ட' அத் திருமுகற்துக்குப் பொருத்தமாகத் தொழிற்பட்டன.

... ... ... ஒரு கை
நீனிற விசும்பின் மலிதுளி பொழிய ஒருகை
வாளர மகளிர்க்கு வதுவை சூட்ட

நீல மேகம் சாலவும் மழை பொழிவிக்க ஒருகையும் அடுத்த கரம் தெய்வ மகளிர்க்கு மண வணி மாலை சூட்டவும் "வள்ளியொடு நகையமர்ந்த திருமுகத்தின் நோக்கதை விளக்கா நின்றன. மாரி வளமும் வாழ்க்கைத் துணையும் உலகின்கண் சீரிய இல் வாழ்க்கைக்குரிய பண்பெனும் குறிப்பை இத் திருமுகமும் இவ்விரு திருக் கைகளும் காட்டும் இயல்பின.

வதனங்கள் ஆறும் முறையே ஓர்க்கும் விளக்கும் வேட்டும் அமரும் விரியும் கொடுக்கும் என்று நூலின்கண் மிக நுணுக்கமாக விளக்கிய ஆசிரியர் அத் திருமுகங்களுக்குப் பொருந்தத் தோள்களிலே இரு கை திரிப்ப, ஒருகை விளங்க, ஒரு கை பொலிய ஒரு கை கொட்ப ஒரு கை இரட்ட ஒரு கை பொழிய ஒரு கை சூட்ட என்றும் 'ஒரு கை ஐயர்க் கேந்தியது' 'ஒரு கை உக்கஞ்சேர்த்தியது' ஒரு கை கடாவ' 'ஒருகை அசைந்தது' என்னும் பன்னிரு கரங்களின் நன்னயம் சுட்டிக் காட்டியிருக்கின்றனர். (தொடரும்)

---

வேதமுட னாகமநூன் மிருதியிவை முதலாக மேவு நூல்கள்
ஏதமறக் கேட்டவற்றின் வழியொழுகிச் சிவயோகத் தெய்தி
நின்றும்
பேதமுறும பிறருமுளங் கொண்டிடநற் சைவநெறி
பிரசங்கித்துர்
தீதிலா [illegible] ரெனுமியல்பு திடஞ்செய்
திட்டோன். (2)

## பரமன் சேய் மீது ...

1 ஆம் பக்கத்து வளர்ச்சி

பிளந்து குடைவரைக் கோயில்கள் அமைத்தான். கலையழகு வாய்ந்த சிற்பங்கள் சமைத்தான்; சிலைகளை ஆக்கினுன். கடினமான கற்களும் அவன் கைத் திறத்தாற் குழைந்துபோய் எழிலுருப் பெற்றன.

இத் துணைத் திறமை வாய்ந்த மனிதன், பாறையைக் காவியமாக்கிடும் பாவாணன் தனது நெஞ்சமாகிய குன்றை உடைத்து வழிப்படுத்த அறியாதிருப்பது விந்தைதான். காயத்தைவளர்க்க வழி கண்டோன் காயத்தைக் கோயிலாக்க அறியாது தடுமாறி நான் என்ற அகந்தை வசப்பட்டு அல்லல் உறுவது வருத்தத்தினை மிகுவிக்கும் ஒன்றே. மனித உள்ளங்களாகிய குன்றத்தை — கிரவுஞ்ச கிரியை — ஞானமாகிய வேலினுலே பிளந்து, கலை செய்யும் வல்லாளன் ஒருவன் உள்ளான். அவனே முருகனுவான். நெஞ்சக்கன கல்லை நெகிழச் செய்யும் அப் பெம்மானை,

'குன்றம் எறிந்தாய்!'

என்று புலவர் முதற்கண் விளித்தமை பொருத்தம் உடைத்தே.

கடல் ஆழமானது, ஓயாது ஒழியாது பேரோசை எழுப்பி உழன்று கொண்டிருப்பது. அதற்கு அமைதியே இல்லை, தன்னிடத்தே நிறைந்து தன்னை நெறிப்படுத்தும் திருவருளினை அது உணர்வதேயில்லை, இத்தகைய மகா சமுத்திரத்திலே ஆணவமாகிய சூரபன்மன் ஒளித்திருப்பதில் வியப்பில்லையே! அவனைத் தடிந்து அருள்நோக்கம் செய்தருளும் ஆற்றலை மறக்கலாமோ? அப்பேராற்றற் பேருருவை,

குரைகடலிற் சூர் தடிந்தாய்!

என அழைத்து அவ்வாறு அழைப்பதன் வாயிலாகவே தமது ஆணவ முனைப்பைப் போக்க முனைகிறார் புலவர்.

இத்தகைய வீரப் பெருமகனுக்குத் தன் தொழிலை நிகழ்த்தப் படை, பரிவாரங்கள் வேண்டுமே என்று அடுத்து அவர் சிந்திக்கின்றார் கேவலம் சின்னாள் இருந்து சிறுதொழில் புரியும் மனிதப் புழுக்களையோ, முக்குணவசத்தால் முறைபிறழ்ந் தொழுகும் தேவர்களையோ படை வீரராகக் குறித்திடப் புலவர் மனம் ஒப்பவில்லை, புல்லிய தலையோடு கூடிய, தமக்கென எதையும்பேணுது தலைவனுக்கே அர்ப்பணிக்கின்ற பூதப் படைகள்தாம் குன்றெறிந்த குமரனுக்கு உகந்த படைகளாக அவருக்குத் தோற்றுகின்றன.

'புன்றலைய பூதப்
பொரு படையாய்!

ஒருநாள் புலவர் இளைஞன் ஒருவனைக் கண்டார். அவன் அழகெலாம் திரண்டு, ஆரோக்கியம் மிக்குப் பார்க்கும் கண்களையெல்லாம் தன் வசமாக்கும் எழிலுருவாய்த் தோற்

(வளர்ச்சி 3-ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரமன் சேய் மீது ...

2 ஆம் பக்க வளர்ச்சி

றினன். சில்லாண்டுகளுக்குப் பின் அதே இளைஞனை மீண்டும் கண்டபொழுது அவருக்கு அதிர்ச்சி காத்திருந்தது. அம்மை நோய் வந்து முகமெல்லாம் பருவின் அடையாளம் பெற்று. தலையின் மயிரெல்லாம் உதிர்ந்து. உடல் உரமும் குன்றிய ஓர் அவலட்சண உருவம் அவரின் கண்களை உறுத்திற்று.

புலவர் சிந்தித்தார். 'இளமையும், செல்வமும். யாக்கையும் நிலையா" என்ற ஞானோதயம் அவருக்கு உண்டாயிற்று.

அந்த ஞானோதய நிலையில் என்றும் அழியா இளமையையும், எழிலையும் ஓர் உருவாக்கி அவர் கனவு கண்டார்.

அக் கனவே முருகனின் திருவுருவாகி முன்னின்றது. அவனைத் தமது ஆசையெலாம் அன்பாய், அருளாய்க் கனிந்த நிலையிலே, 'என்றும் இளையவனே, என்றும் அழகனே, ஏறூர்ந்த பெம்மானின் ஏறனைய பெருமானே' என்று அவர் அழைத்து அமைதி பெற்றார்.

... ... ... ... என்றும்
இளையாய்! அழகியாய்!
ஏறூர்ந்தான் ஏறே!

அழகுருவை. இளமை நலத்தை அருள் வடிவை அருகிருத்தி உள்ளத்திலே குடியேற்றி நினைவுள்ளவரை வழுத்தி வாழ்ந்திடப் புலவர் நினைத்திட்டார்,

'உழையாய் ! என் உள்ளத்!
துறை'

என்று அவர் இரங்கி, வேண்டிக் குரல் எடுத்தார்.

இனி அவர் உரைத்திட்ட தெய்விகப் பாவினைக் காண்போம் :

குன்றம் எறிந்தாய்!
குரைகடலிற் சூர்தடிந்தாய்
புன்றலைய பூதப் பொரு
படையாய் — என்றும்
இளையாய் அழகியாய்
ஏறூர்ந்தான் ஏறே
உழையாய்என் உள்ளத
துறை

(வளரும்)

## பாரதப்பிரதமர் தேர்தற் குற்றத்தில் நிரபராதி

ஐவர் கொண்ட உயர்நீதி மன்றம் பெரும்பான்மை தீர்ப்பிலே திருமதி. இந்திரா காந்தியின் மீது சுமத்திய தேர்தல் சட்ட ஒழுங்கினங்களிலிருந்தும் அவவை விலக்கி அவவின் பாராளுமன்றத் தேர்தல் முடிபு முறையானதெனத் தீர்ப்பு வழங்கியிருக்கின்றது.

தேர்தற் சட்டத்தில் 1974 1975 ஆண்டுகளிற் கொண்டு வரப்பட்ட திருத்தங்கள் அரசியல் அடிப்படை அமைப்புக்கு முரணாகா என்ற தீர்ப்பும் கொடுக்கப்பட்டது.

## தருமை ஆதீனத்திற்கு ருபூசைவிழா

திருதருமை ஆதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீ ல ஸ்ரீ சண்முகதேசி ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள், 25 ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் பரிபூரணம் எய்திய 4 ஆவது ஆண்டு குருபூஜை விழாவை ஐப்பசித்திங்கள் 10 ஆம் நாளன்று சிறப்பாக நடத்தி வைத்தார்கள்.

காலையில் ஸ்ரீ ஆனந்த பரவசர் பூங்காவிலுள்ள குருமூர்த்த ஆலயத்திற்கு ஸ்ரீ.ல ஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளிக் குருமூர்த்திகளுக்கு திருமுறைப் பாராயணங்களுடனும் நாதசுரமங்கள இசைகளுடனும் விசேட அபிஷேக அலங்காரங்களுடனும் ஆராதனைகள் செய்து குருவழிபாடுகளை செய்து கொண்டு பக்த குழாத்துக்கு அருட்பிரசாதங்களை வழங்கினார்கள்.

திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடம் அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமார சாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் குருமூர்த்திவழிபாடுகளைச்செய்துகொண்டு ஆசாரக்கோவை என்ற குரு பூசை நினைவு மலரை வெளியீடு செய்தார்கள். சென்னை புலவர் திரு. என், ஆர். முருகவேள் கலாநிதி சொ. சிங்காரவேலன், திரு. வி. சா. குருசாமி தேசிகர் ஆகியோரின் சொற்பொழிவுகளும் இடம்பெற்றன.

(நமது சிதம்பரம் நிருபர்)

## ஈழக்கலைகளுக்கு கௌரவம்

### இந்திய அரசு செய்துள்ளது

பரதநாட்டியக் கலையிற் பிரபலமான செல்வி. சிவபாதசுந்தரம் பிரசன்னவதனியின் படம் பொறித்த தபால் தலை இந்திய அரசினரால் வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும்

திரு. சோ. சிவபாதசுந்தரம இலங்கை வானொலிப்பகுதியிலே தொண்டாற்றியவர். ஈழகேசரிஆசிரியராக விருந்தவர் எழுத்தாளராகப் பிரசித்தி பெற்றவர் ஆகும்.

## குருபூசை

3-11-75 திங்கட்கிழமையன்று காலை 9 மணிஅளவில் சைவபரிபலான சபை ஆதரவில் மெய்கண்ட தேவநாயனார் குருபூசை நாவலர் மண்டபத்தில் சிறப்பாக நடந்தது சைவப்பெரியார் திரு, சி. தம்பிஐயா அவர்கள் சிவபூசை மண்டபத்தில் சிவபூசை புரிந்து நடராஜப் பெருமானுக்கு விசேட பூசையும் புரிந்தபின் தமிழ்மறை ஓதினார்கள்.

மெய்கண்டதேவ நாயனாரைப்பற்றி விரிவுரையும நடத்தினார்கள்.

திருச்சிற்றம்பலம்

நாளென்செயும் வினைதானெனன்
செயுமெனை நாடிவந்த
கோளென் செயுங்கொடுங்
கூற்றென் செயுங்குமரேசரிரு
தாளுஞ் சிலம்புஞ் சதங்கையுந்
தண்டையுஞ் சண்முகமுந்
தோளுங் கடம்பு மெனக்குமுன்
னேவந்து தோன்றிடினே.
திருச்சிற்றம்பலம்.

— [illegible]

## வங்களா நீ எங்கே செல்கின்றாய்

சிறையிலுள்ள கைதிகளைப் பதை பதைக்கப் படுகொலை செய்யும் பாதகத்துக் கிடமாகி விட்டது வங்களா தேசம் சுதந்திரம் பெற்றுக் கொடுத்த முதல்வர் முஜீப்பையும் குடும்பத்தையும் வதைத்த நினைவு மறையை முறையே இந்த அட்டுழியத்தைச் செய்த பழி வங்களாவுக்குச் சேர்ந்த இராணுவமே எதற்காக இவ்விதமாக நடக்கின்றாய்!

## புதிய பட்ஜட்

அரிசி சீனி, உடை முதலியன வற்றின் விலை குறைக்கப்பட்டதும் அரசஉத்தியோகத்தர்களுக்கு 800/ ரூபாவுக்கு ரூபா 15 மாதவேதனத்தில் அதிகரிப்பதும் வருமான வரி எல்லை வருடம் 9000/ ரூபாவாகக் கூட்டப்பட்டதும் பொதுவாக நடுத்தர மக்களுக்கு ஆறுதலாக அமைந்துள்ளன.

## பாடசாலை மாணவர் பனம்விதையுதவினர்

மில்க்வைற் தாபனத்தார் இவ்வருடம் கிளிநொச்சிப் பிரதேசத்தில இரண்டாம் முறையாகப் பனம் விதைகள் விநியோகம் செய்யப்போகிறார்கள், இவர்களுக்கு 3-11-75 திங்கள் காலை சுளிபுரம், ஐக்கிய சங்க வித்தியாசாலை, வட்டுக்கோட்டை திருஞானசம்பந்தா வித்தியாசாலை, கல்வியங்காடு சைவத்தமிழ் வித்தியாசாலை மாணவ மாணவியர் பனம்விதைகளை உதவினார்கள், இவர்கள் செய்த உபகாரப்புக்கு மில்க்வைற் தாபனத்தார் பொது மக்கள் சார்பில் நன்றி தெரிவித்தனர்.

## அடைவு நகை ஏல விற்பனவு

யாழ்ப்பாணம் 195. காங்கேசன்துறை வீதி திரு. க, செ. த செ, செல்லையாபிள்ளை அவர்களிடம் 1-4-69 தொடக்கம் 31-3-74 வரைக்கும் வைத்த அடைவு நகைகளில் மீட்கப்படாதவைகளை 9-12-75 செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் மேற்படி அடைவு கடையில் வைத்து பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

வி. செ. குட்டிப்பிள்ளை

'இராச கிரி" ஏல விற்பனவாளர்
643, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம். 97, 31-10-75.

## கோட்டுவிற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்
இல. ஈடு / 13758

காங்கேசன்துறை கந்தசாமி சத்தியநாதன் வாதிகள்
எதிராக

மயிலிட்டி அந்தோனியா கோவிலடி இறந்தவரின்
1. வயிரவர்வல்லியும் பெண் சிலம்பியும்
2. சிலம்பி தனக்காகவும் வயிரவன் மரணத்தத்துவகாரர்களாகிய
3. வல்லி சுந்தரம் அவர்கள் பிரதிவாதிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் M B 13758 ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் மூன்று துண்டுக்காணிகளை 1975-ம் ஆடு நவம்பர் மீ 13-ந் உ வியாழக்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: ரூபா 2685/ ம் 9-4-73 தொடக்கம் 6-11-73 வரைக்கும் ரூபாய் 1800 க்கு 12 வீதவட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 497/15 இதில் ரூபாய் 1100 கொடுபட்டது.

### ஆதன விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி மயிலிட்டி கோவிற் பற்று மயிலிட்டி இறை கரப்புவன் நி. ப. 2 குளி 3½ இதில் மேற்தப்பக்கமாக அறுதி விற்ற நி. பரப்பு 1 குளி 1¾ நீக்கி மிகுதி கிழககுப் பக்கமாக நில பர 1 குளி 1¾ இந்தப்பரப்பு ஒன்று குளி ஒன்றே முக்காலுக்கும் எல்லை கிழக்கு சின்னவன் பெண் சின்னச்சயினதனம் வடக்கு ஒழுங்கை மேற்கு பாலன் இராசனுக்கும் பெண் இலட்சுமிப்பிள்ளைக்குமுரிய ஆதனம் தெற்கு முதலி பெண் மூத்தவளுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள் இதடங்கலும் வடக்கெல்லையிலிருக்கும் கிணற்றில் அரைவாசிப் பங்கும் அதற்குரியவைகளும் H 322/27

2. ஷை இறை கரப்புவன் நிபர 2¼ பயிர்வகைகளும் கல்வீடும் கிணறும் இந்தப்பரப்பு இரண்டே காலுக்கும் எல்லை கிழக்கு வயிரவன் கணபதிக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள் வடக்கு அப்புத்துரைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள் மேற்கும் தெற்கும் வல்லி கொத்தனுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள் இதனுள்ளிருக்கும் கிணற்றிலும் தூர்வையிலும் மேற்கெல்லை ஆதனத்தின் மேற்கெல்லை தூர்வையிலும மேற்கெல்லை ஆதனத்திற்குரிய 3/5 ஐந்தில் மூன்று பங்கும் தென் மேற்கெல்லை ஆதனத்துக்குரிய கிணற்றிலும் தூர்வையிலும் சொரியலாய் 1/5 ஐந்தில் ஒருபங்கு பிற நீங்கலாக மிகுதி யடங்கலும் இதன் தெற்கெல்லை ஆதனத்திற்குள்ளிருக்கும் கிணற்றில் இதற்குரிய 1/5 ஐந்தில் ஒரு பங்கும் இதன்மேற்கெல்லை ஒழுங்கையிலிருந்து வடக்கெல்லை ஓரமாக இக்காணிக்கு போக்கு வரவு செய்யும மூன்று முழ அகலப்பாதை உரித்தும் H 353/126

3, ஷை கரப்புவன் நி. பர 2 குளி 3½ இதில் மேற்குப் பக்கமாக நி. பர. 1 குளி 1¾ பயிர்வகைகளும் வீடும இந்தப்பரப்பு ஒன்று குளி ஒன்றே முக்காலுக்கும் எல்லைகிழக்கு எங்களின் 1, 2, பெயருக்குமுரிய மேலே விபரிக்கப்பட்ட 1ம் ஆதனம் வடக்கு ஒழுங்கை மேற்கு நன்னியன் கைம் பெண் பொன்னியினதனம் தெற்கு முதலி பெண் மூத்தவருக்கும் மறுபேருக்குமுரிய வாதனம் இதடங்கலும் இன்னும் வடக்கெல்லையிருக்கும் கிணற்றில் ¼ நாலிலொரு பங்கும் அதற்குரியவைகளும் H 352/191

சு. கந்தசாமி
கொமிசனரும் விலைமதிப்பாளரும்.

சுவாமியார் வீதி
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம் 102 7-11

"அல்லல் என்செயும் அருவினை என்செய்யும்
தொல்லை வல்வினைத் தொந்தம்தான் என்செயும்
தில்லை மாநகர்ச் சிற்றம்ப லவனுர்க்
கெல்லை யில்லதோர் அடிமை பூண்டேனுக்கே"

## நீரைத் தேக்கி நிலத்தை வளஞ்செய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THOUGHTS TO BE TREASURED

சிவ சிவ என்கிலர் தீவினை யாளர்,
சிவ சிவ என்றிடத் தீவினை மாளும்,
சிவ சிவ என்றிடத் தேவரும் ஆவர்,
சிவ சிவ என்னச் சிவகதி தானே.

Sinners do not meditate repeating Siva Siva If they meditate saying Siva Siva, their sins will vanish. If they meditate saying Siva Siva, they will become (of the nature of) God. If they meditate saying Siva Siva, they will indeed enjoy Godly Bliss.

THE SAIVAPRAKASA PRESS

திருச்சிற்றம்பலம்

நமச்சிவாயவே ஞானமும் கல்வியும்
நமச்சிவாயவே நானறி விச்சையும்
நமச்சிவாயவே நாவின் றேத்துமே
நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே.

திருச்சிற்றம்பலம்

Hindu Organ

FRIDAY, NOVEMBER 7, 1975

## Bringing up - Budget

COLLECTIVELY the proposals of the Minister of Finance as described in his speech that genially introduced the Annual Appropriation Bill tend to be a concerted challenge to the nightmare called "Cost of Living".

The Budget is in effect a studied effort to bring the common man round. It is a Relief Budget and stands in bold relief. The year 1976 will be in marked contrast with the previous years yielding enough economic easing to make the people bolder in their fight for physical existence.

The author of this out-of-the-ordinary budget being no other than the one who had earlier in his political life made the mistake of meddling with the common man's comfort but had immediately rectified the blunder, the present proposals carry with them courage of conviction. His appeal to his colleagues in the Opposition to bear with him and work for self-sufficiency in food calls for complete co-operation on all sides. In effect the Minister means it that the people should eat their own rice and curry, and not depend on the 'imports' that export our finances.

The F. D. B. budget provides for cheaper Food, less costly Dress and a comfortable Family Benefit. Whatever the psychological effect it will have on voters, it is undeniable that the proposals are all pleasing.

## Kulasabanathan Collection at the Jaffna Campus

One of the latest valuable additions to the library of the Jaffna Campus is the collection of books and manuscripts of Mr. S. Kulasabanathan a well-known Saiva scholar of Sri Lanka. Himself a good writer especially, on the history of Hindu Temples of Sri Lanka, Mr. Kulasabanathan had a good collection of books and paper cuttings on the history and culture of the Tamils and Hinduism. Besides, he had used his spare time in writing on Tamil studies & Hinduism in Sri Lanka. Some of these are in manuscript form. He had some ola manuscript too. All these are now brought to the Jaffna Campus further enriching the library of the Jaffna Campus.

## DANCE OF SHIVA

(Dr. Ananda K Coomaraswamy)

(Continued from last issue)

The general result of this interpretation of the arch is then, that it represents matter, nature, Prakriti; the contained splendor Shiva dancing within and touching the arch with head, hands and feet is the universal omni-present Spirit (Purusha). Between these stands the individual soul, as ya is between Shi-va and na-ma.

Now to summarize the whole interpretation we find that The Essential Significance of Shiva's Dance is threefold: First it is the image of his Rhythmic Play as the Source of all Movement within the Cosmos, which is Represented by the Arch: Secondly, the Purpose of his Dance is to Release the Countless souls of men from the Snare of Illusion: Thirdly the Place of the Dance Chidambaram, the Centre of the Universe, is within the Heart.

So far I have refrained from all aesthetic criticism and have endeavoured only to translate the central thought of the conception of Shiva's dance from plastic to verbal expression, without reference to the beauty or imperfection of individual works. But it may not be out of place to call attention to the grandeur of this conception itself as a synthesis of science, religion and art. How amazing the range of thought and sympathy of those rishi-artists who first conceived such a type as this, affording an image of reality, a key to the complex tissue of life, a theory of nature, not merely satisfactory to a single clique or race, nor acceptable to the thinkers of one century only, but universal in its appeal to the philosopher, the lover, and the artist of all ages and all countries. How supremely great in power and grace this dancing image must appear to all those who have striven in plastic forms to give expression to their intuition of Life!

In these days of specialization, we are not accustomed to such a synthesis of thought; but for those who 'saw' such image as this, there could have been no division of life and thought into watertight compartments.

(To be continued)

## EXHIBITION & CULTURAL SHOW AT THE JAFFNA CAMPUS

The Students' Union of the Institute of Aesthetic studies of the University of Sri Lanka held an exhibition of arts and crafts in the Ramanathan Block of the Jaffna Campus at Thirunelvely on the 20th and 21st of October. The exhibition included mostly specimens of modern art drawn by the students of the above Institute. The exhibition was declared open by Prof. K. Kailasapathy President of the Jaffna Campus on the morning of 20th October. At the evening Cultural show, Prof. K. Indrapala Dean of the Faculty of Humanities, Jaffna Campus and Mrs. S. Arunachalam Principal of Ramanathan College were the guests of honour. Besides the students of the Institute, some well-known artistes from South like Messrs Parsi Bharata and Nandasiri participated in this show. The cultural show on the 21st October was held at the Mahajana College, Tellippalai. Among the several items, there was a Bharata Natya recital by Miss Krishanti Senathirajah of the Ramanathan Music Academy. Exhibition and Cultural Shows of this type, if held regularly both in North and South Sri Lanka with artistes from the various communities, would certainly promote mutual understanding and respect among the peoples of Sri Lanka.

*Letter to the Editor*

## Proposed Hindu Temple Bill

Sir,

A meeting of the Hindu Religious Affairs Advisory Board was held on Saturday the 25th October, 1975. One of the items was the above Proposed Bill. As previously intimated several times, I expressed and reiterated my complete dissent, both in writing and orally, to this proposed measure, for reasons already given.

S. SIVASUBRAMANIAM
Member Hindu Religious Affairs Advisory Board

## Jaffna Campus UTA is Formed

The University Teachers' Association, Jaffna Campus was formed some months ago. The following were elected as office bearers for 1975 - 1976.

President:- Prof. K. Kailasanatha Kurukkal.

Vice President:- Mr. S. K. Sittampalam.

Joint Secretaries:- Mr. V. Sivasamy, Mr. K. G. Jinadasa.

Treasurer:- Mr. G. Sivagurunathan.

Members:- Messrs. S. Sathiyaseelan, A. Kanapathippillai, H. S. B. Siyambalapitiya, M. U. de Silva, Miss. S. Wanigatunga and Miss. N. Mahesan.

## Sale of Unredeemed Pawned Jewellery

I shall sell by public auction the unredeemed jewellery pawned between 1-4-69 and 31-3-74 with Messrs C. S. T. C. Chelliahpillai, pawn brokers 195, K. K. S. Road, Jaffna on Tuesday 9-12-1975 commencing at 9 a. m. at the said pawn shop.

"Raja giri"
643, K. K. S. Road
Jaffna

V. S. Cuttipillai,
Auctioneer.
(30 7 & 14)

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்.

Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Saiva Prakasa Press 450 K. K. S. Road Vannarponnai, Jaffna on Friday November 7, 1975.

EDITOR-IN-CHIEF R. N. SIVAPIRAKASAM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org